<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | அமுதா | நாள் | 14.02.2025 |
| கணவர் பெயர் | ஆறுமுகம் (எ) சேகர் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

24) ச.எண்.248/1A1 ல் உள்ள நிலமானது சித்தன் என்பவருக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால், சரிதான். மேற்படி சித்தனுக்குபிறகு அவரது வாரிசுகள் தான் தற்போது மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். ச.எண்.248/1A2 ல் உள்ள நிலம் சின்னப்பபையன் என்பருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். தற்போது மேற்படி சின்னப்பையனுக்கு பிறகு அவரது வாரிசுகள் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் உள்ள நிலம் அம்மாசி என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான்.

25) மேற்படி நிலங்கள் அனைத்தும் ஒன்றை ஒட்டி மற்றொன்று அமைந்துள்ளது என்றால், சரிதான். தற்போது இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய தடவழியானது மேற்படி சொத்துக்களை ஒட்டி அமைந்துள்ளது என்றால், இல்லை. மேற்படி பிரச்சனைக்குரிய தடவழியானது ச.எண்.248/1A3 ல் தான் அமைந்துள்ளது. மேற்படி சங்கதியை என் முதல் விசாரணை சாட்சியத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால், அது குறித்து சொல்லவில்லை. மேற்படி ச.எண்.248/1A3 ல் எவ்வளவு நீளத்திற்கு மேற்படி தடவழியானது செல்கிறது என்றால், எங்கள் நிலத்திலிருந்து சிந்தாமணியூர் மெயின் ரோடு வரை மேற்படி தடம் செல்கிறது. சுமாராக 20 அடி இருக்கும்.

26) மேற்படி ச.எண்.248/1A3 க்கு மேற்கில் ச.எண்.248/1B நிலம் உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் சுப்ரமணியன், பெரியண்ணன் ஆகியோர் வீடுகளும், விவசாய நிலங்களும் அமைந்துள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் மேற்கு பக்கம் மேற்படி சர்வே எண்ணின் இறுதி வரை மேற்படி நான் சொல்லும் தடம் செல்கிறது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1B க்கு வடக்கில் ச.எண்.248/1A2 ல் கந்தசாமிக்கு பாத்தியப்பட்ட நிலம் மற்றும் வீடு உள்ளது என்றால்,

சரிதான். ச.எண்.248/1A2 க்கு வடக்கில் தான் குழந்தைப்பையன், பழனி, ஆறுமுகம் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால், சரிதான்.

27) ச.எண்.248/1A3 க்கும் ச.எண்.248/1A1 க்கும் வடக்கில் யார் நிலம் உள்ளது என்றால், கோபாலன், பழனிசாமி ஆகியோர் நிலங்கள் உள்ளது. மேற்படி நபர்கள் அனைவரும் அவரவர்கள் நிலத்திலிருந்து சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு செல்லவேண்டும் என்றால், எவ்வாறு வருவார்கள் என்றால், அவரவர்கள் நிலத்தின் வழியாக கிழக்கு பக்கமாக வந்து, மேட்டுர் மெயின் ரோட்டிற்கு செல்லவேண்டும் என்றால், வடக்கு பக்கமாக சென்று, கிழக்கு பக்கமாக செல்வார்கள். சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு செல்ல வேண்டும் என்றால், முதலில் கிழக்கு பக்கமாக வந்து, பின் வடக்கு பக்கமாக செல்வார்கள்.

28) மேற்படி சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு வடக்கு பக்கம் என்ன உள்ளது என்றால், சிந்தாமணியூர் உள்ளது. தெற்கு பக்கம் என்ன உள்ளது என்றால், மேட்டுர் மெயின் ரோடு உள்ளது. ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகிய நிலங்களுக்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால், வீட்டு மனைகள் உள்ளது. யாருடைய நிலம் என்றால், அது குறித்து தெரியாது. எந்த சர்வே எண் என்றால், அது குறித்தும் தெரியாது.

29) மேற்படி வடக்கு பக்கமுள்ள கோபாலன், பழனிசாமி நிலங்களின் வழியாக எங்களுக்கு ஏதேனும் தடவழி உள்ளதா என்றால், இல்லை. ஏதாவது விசேசங்கள் என்றால், நாங்கள் அவர்களது நிலங்கள் வழியாக சென்று வருவோம். எங்கள் நிலங்களுக்கு மேற்கு புறமாக சென்றால், சிந்தாமணியூர் ரோட்டிற்கு செல்ல இயலாது என்றால், சரிதான். மேற்படி சர்வே எண்களில் வாதி மற்றும் பிரதிவாதிகள் வீடுகள் கட்டி எவ்வளவு காலம் ஆகிறது என்றால், சுமார் 30 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

30) மேற்படி வீடுகளுக்கு மின் கட்டண ரசீதுகள், வீட்டு வரி ரசீது ஆகியவை அவரவர்கள் செலுத்தி வருகிறோம் என்றால், சரிதான். இவ்வழக்கு தாக்கல்

செய்வதற்கு முன்பு மேற்படி தடவழி தொடர்பாக வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றாலும், அதனால், ஒரு போலீஸ் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும், சரிதான்.

31) யார் மேற்படி புகார் அளித்தார்கள் என்றால், குழந்தைப்பையன், ஆறுமுகம், பழனி, காவேரி, கந்தசாமி, மற்றொரு பழனி ஆகியோர் கொடுத்தனர். மேற்படி புகாரின் அடிப்படையில் குற்ற வழக்கு நடந்தது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் சந்தேகத்தின் பலனை அளித்து குற்றம் சுமத்தப்பட்டவர்களை விடுதலை செய்தனர் என்றால், சரிதான். இவ்வழக்கு தரப்பினர்கள் அனைவரும் கிழக்கு, மேற்காக செல்லும் தடத்தை அடைத்தால், தங்கள் வீடுகளுக்கு செல்ல இயலாது என்றால், சரிதான். ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகிய நிலங்களில் வசிப்பவர்கள் சிந்தாமணியூர் ரோட்டிற்கு செல்லவேண்டும் என்றால், அவர்கள் நிலத்தை ஒட்டியுள்ள தென்வடல் தடத்தின் வழியாக வந்து, கிழமேல் தடத்தில் இணைந்து பின் கிழக்கு நோக்கி சென்றால்தான் சிந்தாமணியூர் மெயின் ரோட்டை அடைய இயலும் என்றால், சரியல்ல.

32) நான் சொல்வதுபோல் எங்கள் நிலத்தின் வழியாக வடக்கு பக்கமோ, கிழக்கு பக்கமோ தடம் உள்ளதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. இவ்வழக்கில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்றால், சரிதான்.

33) மந்தி (எ) மந்தி கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு 1987 ம் வருடத்தில் அவரது மகன்கள் அனைவரும் சேர்ந்து ச.எண்.248/1A3 ல் 2.13 ஏக்கர் நிலங்களை விலைக்கு வாங்கினர் என்றால், சரிதான். அதற்கு பின்னிட்டு தான் மேற்படி நபர்கள் தங்களுக்குள் தங்களது பூர்வீக சொத்து மற்றும் கிரய சொத்துக்களை வாய்மொழி பாகங்கள் செய்து கொண்டனர் என்றால், சரிதான். அதன்படி தான் ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2,

ச.எண்.248/1A3, ச.எண்.248/1B ஆகியவற்றிலுள்ள நிலங்களை பாகம் பிரித்துகொண்டு அவரவர் அனுபவத்தில் அவரவர் உள்ளனர் என்றால், சரிதான்.

34) மேற்படி பாகபிரிவினை அடிப்படையில்தான் அவரவர் நிலங்களுக்கு செல்வதற்கு தடவழி ஏற்படுத்திக்கொண்டு பயன்படுத்தி வருகின்றனர் என்றால், சரிதான். ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகியவற்றிற்கு கிழக்கு பக்கமும், ச.எண்.248/1A3 க்கு தெற்கு பக்கமும் சிந்தாமணியூர் மெயின் ரோட்டிற்கு செல்வதற்கு பாதை ஏற்படுத்திக்கொண்டு, அனுபவித்து வருகின்றனர் என்றால், சரிதான். இவ்வழக்கிற்கு பின்னிட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தான் அ.வ.எண்.345/2015 என்ற வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான்.

35) இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் நாங்கள் அ.வ.எண்.345/2015 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.345/2015 என்ற வழக்கில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதிகள் தாவா தடவழியை ஏற்படுத்திக்கொண்டு அதை பயன்படுத்தி வரும் நிலையில், அதை மறுப்பதற்கு இரு தரப்பினர்களுக்கும் உரிமை இல்லை என்றாலும், நான் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே அளித்த சாட்சியத்தின் குறைகளை சரிசெய்ய தற்போது பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வாதிகள் கோரியவாறு வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றாலும், சரியல்ல

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.